DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No 351/2019

Deposition of Witness : LW2/PW1

| Name | வேல்முருகன் | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| fathers/ Name | தனவேல் | Village | |
| Age | | Calling | விவசாயம் |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 21.**08.2025** | | | |

(Accused present.

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை :

நான் தற்போது பண்ருட்டி, பாவைக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி குமரேசன் எனது தம்பி. பட்டியல் சாட்சிகள் அசோக்குமார், சுரேந்தர் ஆகியோர்கள் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரியை தெரியும் அவரும் நான் வசிக்கும் ஊரைச்சேர்ந்தவர். கடந்த 22.07.2019 அன்று எங்கள் ஊரில் மாரியம்மன் கோயில் திருவிழா நடந்தது. மேற்படி திருவிழாவை எனது அப்பா தனவேல் தலைமை தாங்கி நடத்தினார். அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் சாமி ஊர்வலம் தொடங்கியது. அப்போது சாமி ஊர்வலத்தின்போது நானும், எனது தம்பி குமரேசனும், எனது அப்பாவும் உடன் சென்றோம். சாமி ஊர்வலம் எங்கள் ஊரில் உள்ள 2 தெருகள் தாண்டி சென்றபோது இரவு சுமார் 12 மணியளவில் மழை பெய்ய ஆரம்பித்தது. இதனால் நானும், எனது அப்பாவும் எனது தம்பி குமரேசனிடம் மேற்படி சாமி மீது மழை பெய்ந்து நனையாமல் இருக்க மேற்சொன்ன சாமி மீது போர்த்த தார்ப்பாய்யை கொண்டு வருமாறு கூறினோம். அதன்பேரில் எனது தம்பி குமரேசன் எங்கள் தெரு பாண்டியன் வீடு எதிரே நோக்கி நடந்து சென்றபோது எதிரி வேல்முருகன் இருச்சக்கர வாகனத்தில் என்னையும் என் அப்பாவையும் தாண்டி சென்று எனது தம்பியின் பின்னால் சென்று அவரரையும் தாண்டி சென்றார். அப்போது என் தம்பி குமரேசன் எதிரி வேல்முருகனை பார்த்து தெருவில் கோலம் போட்டுக்கொண்டுயிருக்கிறார்கள் எதற்கு இவ்வளவு வேகமாக வண்டியில் செல்கிறீர்கள் என்று கேட்டார். மேற்படி எதிரி வேல்முருகன் சிறிது தூரம் தள்ளிச்சென்று மீண்டும் வண்டியை திருப்பி எனது தம்பியை

நோக்கி வந்து நான் அப்படி தான் போய்வேன் நீ யாருடா தேவிடியா பையா என்ன கேட்குற என்று அசிங்கமாக திட்டி எனது தம்பியின் இடது கன்னத்தில் கையால் அறைந்தார். என் தம்பி அதை தடுக்க முயன்றபோது எதிரி வேல்முருகன் எனது தம்பியின் வலது கை ஆள்காட்டி விரலை நகத்துடன் கடித்து துண்டாக துப்பினார். நாங்கள் அதை அந்த இடத்தில் தேடி பார்த்தோம் கிடைக்கவில்லை. என் தம்பி வலி தாங்காமல் கத்தினார். அவரை நானும், எனது சித்தப்பா சக்திவேலும், (சக்திவேல் த/பெ. முத்துகுமரன், வடக்குதெரு, பாவைக்குளம், பண்ருட்டியில் வசிக்கிறார்.) எனது தம்பி குமரேசனை சிகிச்சைக்காக பண்ருட்டி அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தோம். பின்னிட்டு மேல்சிகிச்சைக்காக கடலூாரில் உள்ள தனியார் மருத்துமவனையான லட்சுமி மருத்துமவனையில் மேல்சிகிச்சையில் சேர்த்தோம். மேற்படி சம்பவத்தின்போது சாட்சிகள் அசோக்குமார், சுரேந்தர் ஆகியோர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். அவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கிவிட்டார்கள். போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக வழக்கு சம்பவத்தை பற்றியும், சம்பவ இடத்தை பற்றியும் சம்பவத்திற்கு மறுநாள் 23.07.2019 அன்று விசாரித்தார்கள். மேற்படி சம்பவ இடமானது எங்கள் ஊரைச்சேர்ந்த பாண்டியன் என்பவரது வீட்டின் எதிரே நடந்தது.

**(சில ஆவணங்களை வைத்து குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று எதிரி வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**